www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

QL

# காலாண்டுப்பொதுத் தேர்வு - 2024

12 - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2) கொடுக்கப்பட்டுள்ள 4 மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து விடையினையும் எழுதவும். 14 X 1= 14

1. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

2. ***கருத்து 1:*** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் பயனிலை என்று வருவதே மரபு.

***கருத்து 2 :*** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

3. தம்முடைய வட்டார எழுத்திற்கு "கரிசல் இலக்கியம்" என்று பெயரிட்டவர்

அ) ஜெயகாந்தன் ஆ) தோப்பில் முகமது மீரான் இ) தி.ஜானகிராமன் ஈ) கி.ராஜநாராயணன்

4. இராமனை, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு செய்தவர்

அ) சவரி ஆ) அனுமன் இ) சடாயு ஈ) வீடணன்

5. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ல் ஈ) வேளாண்மை

6. 'தாவோ தே ஜிங்' எனும் சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) அய்யப்ப மாதவன் இ) சி.மணி ஈ) என். சத்தியமூர்த்தி

7. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்பு

இ) இடைச்சொல் தொடர்பு ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

8. **கூற்று :** இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்

**காரணம் :** கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று சரி, காரணம் சரி ஈ) கூற்று தவறு, காரணம் தவறு

9. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் பாடியவர்

அ) திருஞானசம்பந்தர் ஆ) அப்பர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்

10. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

11. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

மோ.ஜீவா.
எம்.ஏ.பி.எட்.எம்.ஃபில்.,
முதுகலை தமிழாசிரியர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1) பரலி. சு.நெல்லையப்பர்

ஆ) நிலவுப் பூ - 2) தி.சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

13. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ... பயின்று வந்துள்ளது.

அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம்

இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

14. 'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மனம் கழிக' - என்னும் ஐங்குறுநூறு பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூகமுறை

### பகுதி - II (பிரிவு - 1)

**குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
16. இராமலிங்க அடிகள் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?
17. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
18. ஞாலத்தின் பெரியது எது?

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 X 2 = 4

19. வெள்ளச் சமவெளிகளின் பயன்கள் குறித்து எழுதுக.
20. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
23. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

24. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) நிலத்தக் கொளறனும்டா அப்பதான் வகுறு நிறையும்.

ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

25. ***கலைச் சொல்லாக்கம் தருக.***

அ) Fiction ஆ) Bibliography



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) கண்டான் ஆ) வியந்து

27. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

தலைமை

28. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***

அ) ஒருமையுடன் ஆ) இளநரை

29. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***

அ) எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை கொள்.

ஆ) மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். நமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

30. ***உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.***

அ) தாமரை இலை நீர்போல ஆ) அச்சாணி இல்லாத தேர் போல

## பகுதி - III (பிரிவு - 1)

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32. 'வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.

34. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. சென்னை அறிவின் நகரமாக திகழ்ந்த வரலாற்றை எழுதுக.

38. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

***(அல்லது)***

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார் – கவிமணி தேசிக விநாயகம்.

41. வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக. *(அல்லது)*

பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும். *(அல்லது)*

ஆ) யானைக்கும் அடிசறுக்கும்.

43. தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary ; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it. Understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க. *(அல்லது)*

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுரை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக,

*(அல்லது)*

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க. *(அல்லது)*

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4 + 2 = 6

47. அ) வையகம் பனிப்ப ........ எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'படும்' – என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



மோ.ஜீவா.
எம்.ஏ.பி.எட்.எம்.ஃபில்.,
முதுகலை தமிழாசிரியர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com